DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.43/2019**

**அ.சா.11**

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | முருகன் | Caste: | |
| Father's/Husband Name: | கிருஷ்ணமூர்த்தி | Calling: | சார்பு ஆய்வாளர், பணிஓய்வு |
| Village: | 10/378, இரட்டை பிள்ளையார் கோவில் தெரு, பரமக்குடி | Religion: | |
| Taluk: | | Age: | 60 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 10.11.2025

( 5ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )

**முதன்மை விசாரணை**

நான் 30.06.2025ம் தேதி கீழத்தூவல் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றேன். கடந்த 17.09.2017ம் தேதி பார்த்திபனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் பொறுப்பில் 21.30 மணிக்கு நிலையப்பொறுப்பில் இருந்தபோது 22.15 மணிக்கு பரமக்குடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு 22.35 மணிக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த பார்த்திபனூர் தெற்கு தெருவை சேர்ந்த சாமுவேல் மகன் மதுரை வீரன் என்பவரை விசாரித்தபோது அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை மதுரை வீரன் சொல்லசொல்ல அவரது பங்காளி அரியமுத்து மகன் அய்யனார் என்பவர் எழுதி அவரிடம் படித்துக் காண்பித்து மதுரை வீரனிடம் கையெழுத்து பெற்று தானும் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்தார்.

மனுவோடு நிலையம் வந்து 23.45 மணிக்கு மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண். 269/2017 சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 355, 506(ii) IPC r/w 4 of TNPHW Act 2002 and 3(1)(X) of SC/ST Act ன் பிரகாரம் வழக்குப்பதிவு செய்தேன். அசல் புகார் மனுவையும், முதல் தகவல் அறிக்கையையும் முதன்மை அமர்வு நீதிபதி, இராமநாதபுரம் அவர்களிடமும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளிடமும் ஒப்படைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7**. இது சம்மந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் நாள் 17.09.2017 மாலை 05.00 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு சென்று 17.09.2017 இரவு 23.45 மணிக்கு புகார் மனுவை பெற்றேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திலிருந்து பரமக்குடி மருத்துவமனைக்கு செல்லும் வழியில்தான் எங்கள் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்திற்கும் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 15 கிலோ. இருசக்கர வாகனத்தில் சுமார் 20 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் Column-8 ல் புகார் பெறுவதில் ஏற்பட்ட காலதாமதம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்திற்கும் இராமநாதபுரம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 55 கிமீ துாரம் இருக்கும். சுமார் 1 மணிநேரத்தில் எங்கள் காவல் நிலையத்திலிருந்து இராமநாதபுரம் முதன்மை மாவட்ட அமர்வு

நீதிமன்றத்திற்கு வந்துவிடலாம் என்றால் சுமார் 1 ½ மணி நேரம் ஆகிவிடும். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை இராமநாதபுரம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் 18.09.2017 அன்றுதான் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த காலதாமதத்திற்கு காரணம் உயர் அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில வழக்கிற்கு ஏதுவா பின்னிட்டு முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டு முன்னேற முன்தேதியிட்டதுதான் காரணம் என்றால் சரியல்ல. என்னிடம் கொடுக்கப்பட்ட புகார் மனுவில் 6 வது வரியில் உள்ள மாலை இடைச்செறுகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பெற்ற புகார் மனுவின் 2 ம் பக்கம் 19 ம் வரியில் கேட்டு என்ற வார்த்தையை திருத்தம்செய்யப்பட்டு போட்டு என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மருத்துவமனை செல்வதற்கு தொலைபேசி மூலமாக தகவல் கிடைத்தது. என்னிடம் அளிக்கப்பட்ட புகார் மனுவில் எந்த எதிரி சாதி பெயர் சொல்லி திட்டினார் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மனுவில் முள்ளுகம்பால் யார் அடித்தார்கள், உடலில் எங்கு அடித்தார்கள் என்பது குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் புகார்தாரர் மதுரை வீரன் பார்த்திபனூர் ஊராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் பெறுவதற்கு ஏற்பட்ட காலதாமதம் ஊராட்சி மன்ற தலைவர்தங்கவேலின் ஆலோசனையின் பேரிலும் மற்றும் ஆய்வாளரின் ஆலோசனையின் பேரில் பின்னிட்டு தயார் செய்யப்பட்டு முன்நேரம் இட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் இருந்த முன்விரோதத்தை அடிப்படையாக வைத்து முறையாக விசாரணை செய்யப்படாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>1 முதல் 4, 7, 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

5, 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக 1 முதல் 4, 7, 8 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் சொன்னதால் தனியாக குறுக்கு விசாரணை இல்லை.

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)